ரெடிங் தமிழ் கல்விக்கூடம்

Reading Tamil School

2019/2020

# வளர் தமிழ் 6

## பயிற்சி 2

பெயர் ______________________________

www.readingtamilschool.co.uk

admin@readingtamilschool.co.uk

1. **பேச்சுப் பயிற்சி**

உனது நண்பன்/நண்பி பற்றி விவரித்துச் சொல்லவும்.

2. **வாசித்தல்**

சங்கர் என்பவர் ஒரு தபால்காரர். அவர் மிகவும் ஏழை. அவர் ஒரு முறை தன் நண்பர் ஒருவரிடம் பணம் வாங்கியிருந்தார். அந்தப் பணத்தை எப்படித் திருப்பிக்கொடுப்பது என்று சங்கர் கவலைப்பட்டார். ஒரு நாள், திருமதி மீனா என்பவர் தன் தோழி மாலதிக்கு ஒரு கடிதம் அனுப்பியிருந்தார். அதில் நிறையப் பணமும் இருந்தது. அதைப் பார்த்த சங்கர் அந்தப் பணத்தை எடுத்துத் தன் கடனை அடைத்தார். அடுத்தவருக்குச் சேர வேண்டிய பணத்தை எடுத்துத் தன் கடனை அடைத்ததால் அவர் நிம்மதியில்லாமல் தவித்தார். மறுநாள், சங்கர் திருமதி மீனாவைச் சந்தித்து நடந்ததைக் கூறினார். தான் இருந்த சூழ்நிலையில் என்ன செய்வதென்று தெரியாமல் தவறு செய்துவிட்டதாகக் கூறி மன்னிப்புக் கேட்டார். திருமதி மீனா சங்கரை மன்னித்தார். மேலும் அவர் சங்கருக்கு தன்னால் முடிந்த பண உதவியைச் செய்தார். சங்கர் அவரைப் பார்த்து நன்றியுடன் கைகூப்பினார். அன்றிலிருந்து சங்கர் எப்போதும் நேர்மையாகவே நடந்துகொண்டார்.

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் வளர் தமிழ் 6

<u>**நிறுத்தற் குறிகள்**</u>

**முற்றுப்புள்ளி** **.** **(Period, Full Stop)**

- சொல்லியத்தின் முடிவில் இடம்பெறும்.
- சொற்குறுக்கம் ( திரு. )
- பெயர்க்குறுக்கம் ( த. எழிலன் )

**காற்புள்ளி** **,** **(Comma)**

- பட்டியலிடும்போது
- முகவரி இடும்போது
- சொல்லியத்தில் பொருள்மயக்கத்தை தெளிவுபடுத்த
- விளிப்பெயர்களை அடுத்து
- ஆனால், ஆயின், ஆகையால், எனவே போன்ற சொற்களுக்குப் பின்

**வினாக்குறி** **?** **(Question Mark)**

- வினாச்சொல்லியத்தின் முடிவில் இடம்பெறும்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

**வியப்புக்குறி** | ! | **(Exclamation Mark)**

- உணர்ச்சிகளை (மகிழ்ச்சி, வியப்பு, அச்சம், அவலம், இரங்கல்) உணர்த்தும் சொல்லை அடுத்து இடம்பெறும்.

**அடைப்புக்குறி** | ( ) | **(Parenthesis, Brackets)**

- எழுத்துப்பகுதியின் இடையே மேற்கோள்கள் அல்லது விளக்கத்தினை உண்டாக்குவதற்காக இடம்பெறும்.
- ஆக்கங்களுக்கு இடையில் ஒரு சொற்றொடரின் விளக்கத்திற்காக பிறமொழியினைப் பயன்படுத்தும்போது அது அடைப்புக்குறிக்குள் இடம்பெறும்.

**இரட்டை மேற்கோள்குறி** | “ “ | **(Quotation Mark)**

- ஒருவர் கூறியதை மேற்கோள் காட்டும்போது இடம்பெறும்
- நேர்கூற்றிற்கு முன்னும் முடிவிலும் இடம்பெறும்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

### 3. நிறுத்தற்குறிகளுடன் எழுதவும்

ஒரு ஊரில் மாறன் குயிலி எழிலன் தமிழினி ஆகிய நால்வரும் சிறந்த நண்பர்கள் ஒரு நாள் மாறன் மற்றவர்களைப் பார்த்து இன்று நாம் கோவில் திருவிழாவிற்கு சென்றுவருவோம் என்றான் அதற்கு தமிழினி இன்று என்ன விசேடம் மாறன் எனக் கேட்டாள் இன்றுதான் சாமி உலாவருகிறார் என்று பதிலளித்தாள் குயிலி ஹையா எனக் குதித்தான் எழிலன் நால்வரும் மகிழ்ச்சியுடன் தங்கள் தாய் தந்தையரிடம் அனுமதி பெறுவதற்காக தத்தமது வீடு நோக்கி ஓடினார்கள்

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

4. **பின்வரும் சொல்லியங்களைத் தமிழில் எழுதுவோம்.**

- Ants work hard all summer.

  ______________________________________________

- He saw a butterfly on the wall.

  ______________________________________________

- Owls have big eyes.

  ______________________________________________

- The donkeys were carrying heavy packs.

  ______________________________________________

- Cow eats grass.

  ______________________________________________

- I like playing football .

  ______________________________________________

- My favourite subject is Maths.

______________________________________________

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

5. **இலக்கண - மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

- திணை எத்தனை வகைப்படும்? அவற்றைக் கூறுக.

___

___

- பின்வரும் சொற்களின் திணை, பால் என்பவற்றைத் தருக.

| | திணை | பால் |
|---|---|---|
| புறாக்கள் | | |
| தலைவர்கள் | | |
| கிளி | | |
| தங்கை | | |
| மாணவன் | | |
| முயல் | | |
| ஆசிரியர்கள் | | |
| தோழி | | |

ரெடிங் தமிழ் கல்விக்கூடம் - வளர் தமிழ் 6

- இலக்கணவகையால் பால் எத்தனை வகைப்படும்? அவற்றைக் கூறுக.

___

___

___